**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No. : S. T. C. No. 509/2020**

**Prosecution Witness : P. W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : அமர்நாத் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 10/02/2026

Accused Present.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிரி தரப்பில்)**

ஏற்கனவே நீதிமன்ற விசாரணையில் எதிரிக்கு நான் பணத்தை ரொக்கமாகவும், காசோலை மூலமாகவும் கொடுத்திருப்பதாக சொல்லிய விவரத்தினை பிரமாணத்திலும், புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லியிருக்கிறேனா என்றால், சொல்லியிருக்கிறேன். வங்கி பரிவர்த்தனைகளுக்கு வங்கி அறிக்கை மற்றும் காசோலை மூலமாக கொடுத்த பணத்தை எதிரி அவரது வங்கியில் செலுத்தி பெற்றுக் கொண்டதற்காக வங்கி அறிக்கையும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால், இல்லை. அந்த ஆவணங்கள் நான் தற்போது தாக்கல் செய்ய தயாரா என்றால், மேற்படி எனது வங்கி கணக்கு தற்போது மூடப்பட்டு விட்டது. எதிரி நான் கொடுத்த காசோலையின் மூலமாக பணத்தை அவர் வங்கி மூலமாக பெற்றிருந்தால் அது அவருடைய வங்கி பரிவர்த்தனை செய்த கணக்குகளில் பதிவாகி இருக்கும் என்றால், சரிதான். வழக்கில் நான் சொல்லியுள்ள வழக்கு காசோலை பணம் எவ்விதத்தில் எனக்கு கிடைக்கப்பெற்றது என்ற விவரத்தினை சொல்லவில்லை என்றால், சரிதான். அந்த

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA Date: 2026.02.10 16:48:55 +0530

பணத்திற்கு நான் வருமான வரி கட்டியிருக்கிறேனா என்றால், இல்லை. விவசாயம் மூலம் எனக்கு கிடைத்தது. இந்த விவரத்தினை நான் பிரமாணத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான். என் மாமா மூலமாக தான் எதிரியை எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன். என் மாமாவிற்கும் எதிரிக்கும் இடையே இருந்த காசோலை மூலமாக பணம் கொடுக்கல் வாங்கல் பரிவர்த்தனைகள் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். என் மாமாவிற்கு எதிரி கொடுத்திருந்த காசோலையை வைத்து அந்த பணத்தை என் மாமாவிற்கு எதிரி கொடுத்த பின்பும் தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை நான் போட்டிருக்கிறேன் என்றால், சரியல்ல. மாமா பணம் கொடுக்கவில்லை. நான் தான் கொடுத்தேன். பணம் கொடுத்ததற்கான எந்த வித ஆதாரங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. இந்த வழக்கு என் மாமாவிற்கு கொடுக்கப்பட்ட காசோலை என்பதால் நான் தவறாக அதனை பயன்படுத்தி போட்டிருப்பதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. நான் பணம் கொடுத்து அதன் பேரில் வழக்கு காசோலை, ஒரு புரோநோட்டும் எதிரி எனக்கு எதிரி எழுதி கொடுத்துள்ளார். மேற்படி 2 ஆவணங்களும் நானே வழக்கிற்காக தயார் செய்த ஆவணங்கள் என்றாலும், எதிரியால் கொடுக்கப்பட்டவை அல்ல என்றாலும் சரியல்ல.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2026.02.10 16:49:04 +0530